# 2017 காலி கலந்துரையாடலில் அட்மிரல் ஸ்கொட் ஸ்விப்ட் அவர்கள் ஆற்றிய உரை

அன்பான அறிமுகத்திற்கு நன்றி.

மதிப்புக்குரிய விருந்தினர்களே, சீமான்களே பெருமாட்டிகளே காலை வணக்கம். இன்று உங்களிடையே இங்கிருப்பது எனக்கு மிக மகிழ்ச்சி நிறைந்ததாக உள்ளது. எங்களை இங்கே அழைத்த இலங்கை கடற்படை குறிப்பாக கடற்படைத் தளபதி அட்மிரல் சின்னையா அவர்களுக்கு அவர்களது விருந்தோம்பலுக்காக நன்றி கூற விரும்புகின்றேன். கடல் மற்றும் கடற்துறை தலைவர்களிடையே முக்கிய விடயங்களைக் கலந்துரையாடுவதற்கான மிக முக்கியமான இடங்களில் ஒன்றாக காலி கலந்துரையாடல் உள்ளது. மேற்கத்தைய பசுபிக் கடல் மாநாடு, ஷன்கிரி லா உரையாடல் மற்றும் இந்து சமுத்திர கடல் மாநாடு போன்ற சபைகளில் பிராந்தியம் மற்றும் உலகம் பூராகவும் தொடர்ந்து இடம்பெறும் கலந்துரையாடலின் ஒரு முக்கிய பாகமாக இது உள்ளது. கடந்த வருடத்தில் இந்த காலிக் கலந்துரையாடல் இந்தப் பெரிய இடத்திற்கு நகர்த்தப்பட வேண்டியிருந்த உண்மையானது பிராந்தியத்தில் மாத்திரமல்லாமல் உலகளாவிய ரீதியில் இதன் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தினை சுட்டிக்காட்டும் ஒன்றாக உள்ளது.

இவ்வாறான ஒரு மதிப்புமிக்க கடற்துறை தலைவர்களின் சபையில் இருப்பதையிட்டு நான் கௌரவமடைகிறேன். ஆறு கண்டங்களிலிருந்தும் சமுத்திரங்களில் இருந்தும் உண்மையில் உலகளாவிய ரீதியில் எல்லா அக்கறையுடையவர்களிடமிருந்தும் இன்று நாங்கள் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கிறோம். அனைத்தையும் விட நான் நினைக்கிறேன் கடலானது எங்கள் எல்லோரையும் எவ்வாறு இணைக்கிறது என்பதற்கான ஒரு பொருத்தமான பிரதிநிதித்துவம் இதுவாகும். இந்த அறையில் பிரசன்னமாக இருக்கும் எண்ணங்களின் பல்வகைத்தன்மை மற்றும் அனுபவத்தில் இருந்து நான் கற்றுக்கொள்ள எதிர்பார்த்திருக்கின்றேன். நான் எங்களது தேசியங்கள் கடலால் இணைக்கப்பட்டிருக்கிறது என்று, இப்பொழுது சொன்னேன். பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக துணிச்சல் மிக்க ஆண்களும் பெண்களும் ஏழு கடல்களின் பெரும் தூரங்கள் ஊடாக வர்த்தகப் பண்டங்களையும், மக்களையும், பண்டங்களையும் போக்குவரத்துச் செய்வதற்கு காற்றினையும் ஓடும் நீரோட்டங்களையும் பயன்படுத்தியிருந்தனர். நீண்ட நாட்களுக்கு முன்னர் நிறுவப்பட்டிருந்த அந்தக் கடற்பாதைகள் பருவக்காற்றுக்கள் கப்பலோட்டல் காலத்தை ஆண்ட அந்தக் காலத்தில், உலகம் பூராகவும் உள்ள வளர்ச்சியையும், வளத்தையும் வலுவூட்டி இருந்தன.

இந்த தன்னியக்கம் இன்றும் உள்ளது. உலகளாவிய வர்த்தகத்தின் 90 வீதம் கடல் வழியிலான போக்குவரத்திலேயே தங்கியுள்ளது. ஒரு அதிகரித்த விதத்தில் ஒன்றிலொன்று உலகளாவிய பொருளாதாரத்தில் தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கு வள சந்தர்ப்பத்தை அனுமதிக்கும் நிலமைகளை அமைத்துக் கொள்ளும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் முகமாக கடலில் பாதுகாப்பைத் தொடர்ந்து வழங்கும் விருப்பை நாம் பகிர்ந்து வருகிறோம்.

கடந்த 70 ஆண்டுகளாக இந்தோ ஆசியா பசுபிக் பிராந்தியத்தில் சர்வதேச நெறிகள், நியமங்கள் ஒழுங்குகள், சட்டங்கள் என்பவற்றுக்கு ஒடடியொழுகி அவற்றுக்கு எமது கூட்டு மதிப்பின் பெரும் பாகமாக இருப்பதன் நிமித்தமாக ஸ்திரத்தன்மை மற்றும் வளத்தின் மட்டத்தை முன்னெப்போதும் இல்லாத அளவில் சாதித்துள்ளோம். இந்த முக்கிய கட்டங்களானவை ஒரு தேசியத்தால் மற்றவற்றின் மீது

விதிக்கப்பட்டவையல்ல. மாறாக அவைகள் அளவு, இராணுவ பலம் அல்லது பொருளாதார பலம் என்பவற்றைப் பொருட்படுத்தாது ஒரு சம குரலைக் கொண்டு எல்லா அரசுகளுடனும் இணக்கப்பாடு இணக்கம் என்பவற்றின் ஊடாக ஏற்பட்டவையாகும். இரண்டாம் உலக யுத்தம் முடிவடைவதிலிருந்து வானம், விண்வெளி, மண்டலம் மற்றும் நிச்சயமாக கடலாதிக்கம் உட்பட்ட பகிரப்பட்ட ஆதிக்கம் அனைத்துக்குமாக இவைகளுக்கு அனைவரும் செல்லக்கூடியதாக பாதுகாப்பதற்கான அத்திவாரத்தை இந்த முறைமையை வழங்கியது. இந்த முக்கியமான கொள்கைகளுக்கான எங்களது கூட்டு ஆதரவானது பிராந்திய பொருளாதாரத்தை ஒரு விரைவான வளர்ச்சியான பயனுள்ள வழிகளுக்கு நிலைமாற்றியுள்ளது.

வளத்தின் எழுச்சிப் பெருக்கினால் வறுமையிலிருந்து மில்லியன் கணக்கானோர் உயர்த்தப்பட்டு அது பிராந்தியம் பூராகவும் பல தேசியங்களை நன்மையடையச் செய்துள்ளதுடன் தொடர்ச்சியான வளர்ச்சிக்கும் வரையறையற்ற இயலுமை தொடர்ந்தும் உள்ளது. இந்தப் போக்கானது எவ்வாறாயினும் சட்ட அடிப்படையிலான ஒழுங்கை மேன்னிலைப்படுத்தும் ஒழுங்குகளைப் பலப்படுத்துவதற்கான எமது கூட்டு இயலுமையிலேயே தங்கியிருக்கிறது.

கடந்த வருட ஆரம்பத்தில் பங்களாதேஷில் இடம்பெற்ற இந்திய சமுத்திர கடல் மகாநாட்டில் நான் சமூகமளித்திருந்தேன். அங்கே அந்த நேரத்தில் நான் குறிப்பிட்டிருந்தேன் மாலாக்கா நீரிணையில் நான் நின்று மேற்கு பசுபிக்கை நோக்கி கிழக்கைப் பார்ப்பேனாயின் சர்வதேச சட்டத்தின் பிரகாரமும் நிறுவப்பட்ட பொறிமுறைகளைப் பயன்படுத்தியும், ஒழுங்குகளின் அடிப்படையிலான முறைமையையும், அது வழங்கும் எல்லா நன்மைகளையும், முடிவுக்கு கொண்டு இயலுமையைக் கொண்டுள்ள அந்த நீடித்த கடல் பிணக்குகள் தீர்க்கப்படாதிருப்பதை நான் கண்டேன் எனக் குறிப்பிட்டேன். இந்த நியமங்களிலிருந்து பிழையாக திசைமாறிச் செல்வதானது வல்லமையே சரியானது என்று தோற்றுப்போன கூற்றினை மையமாகக் கொண்ட ஸ்திரத்தைக் குலைக்கும் வகையில் எங்களை மிகவும் பின்தள்ளிவிடக் கூடும்.

அதற்கு சில மாதங்களுக்குப் பின்பு இந்தோனேசியாவில் மேற்கு பசுபிக் கடல் மகாநாட்டில் ஸ்திரத்தன்மை இழப்பின் பிராந்திய நிலைமாற்றப் போக்கினை அறிந்துகொண்டு இந்து சமுத்திரத்தின் மையத்திற்கு எனது உரையாற்றுகைக் கருத்து தெரிவிப்பினை மீளத் திசைமுகப்படுத்தினேன். கிழக்கு ஐரோப்பாவின் மேற்குப் பகுதிகள் லெவன்ற், மகப் என்பவற்றைப் பார்த்து உக்ரைன், சிரியா, லிபியாவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் குழப்பங்களை நான் அவதானித்தேன்.

அந்த நேரத்தில் மத்திய தரைக்கடல் கருங்கடலின் பல பாதிக்கப்பட்ட நிலத்துண்டங்களின் வளர்ச்சியை இல்லாது செய்வதற்கு கடல்வழிப் பாதைகளின் ஊடாக கடற்கரை அடிப்படையான முரண்பாடுகளை நான் கண்டேன். ஒத்துழைப்பைக் காட்டிலும் பலவந்தத்தை அடிப்படையாகக் கொண்ட கடல் ஊடாட்டங்களின் விளைவாக வரும் சுழலும் ஸ்திரத்தன்மை தொடர்பாக ஒரு எச்சரிக்கை கதையாக நான் இரண்டு உதாரணங்களையும் எழுப்பியிருந்தேன்.

இந்து சமுத்திரத்தின் இருபக்கங்களிலும் எதிர்கொள்ளப்பட்ட அச்சத்திற்கு முரணான வகையில் அதன் கரைகளை வளைத்துக்கொண்டுள்ள அத் தேசியங்கள் கடல் அமைதியினால் நன்மையடையக்கூடிய தேசியங்களின் ஒப்பீட்டை நான் அவதானித்தேன். ஆகவே நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். ஏன் இவ்வாறு, என்று நான் கேட்டேன். இந்து சமுத்திரங்களின் எல்லையில் அமைந்துள்ள தேசியங்கள்

அவற்றின் உரிமை கோரும் அளவு செல்வம், செல்வாக்கு என்பவற்றில் சமநிலையற்று இருப்பினும், ஏதேச்சாதிகாரத்தை கட்டுப்படுத்துவதற்கு இட்டுச் செல்லும், அதன் மூலம், வெளிப்படைத்தன்மையின்மை, நம்பிக்கையின்மை என்பவற்றைத் தவிர்க்கும், கலந்துரையாடல், உரையாடல் என்பவற்றின் ஊடாக நீண்டகாலமாக இருக்கும் கடல் எல்லை பிணக்குகளையும், தென் சீனக்கடல் மற்றும் ஏனைய இடங்களிலும் நிறைந்துபோயுள்ள உறவுகளை சீரழித்துள்ள சந்தேகத்தையும் அவர்கள் தீர்த்துக்கொண்டுள்ளார்கள் என்ற தகவலாகும். இந்திய சமுத்திர அரசுகளுக்கிடையிலான ஆரோக்கியமான போட்டியானது அவசியமானதும், சர்வதேச சட்ட அடிப்படை ஒழுங்குகளினால் அறியப்பட்டதும், முழுப் பிராந்தியத்திற்கும் நன்மையளிக்கும் ஒரு கூட்டுறவு பாதுகாப்பு சூழலை வளர்ப்பதாகவும் இருக்கிறது. இது நாம் நானைவரும் நன்கு அறிந்து வைத்திருக்கப்படுவதையும், எழும் எவ்விடத்திலும் எழுபவற்றினால் பெறுமதி காணப்படுவதற்குமான ஒரு உதாரணமாகும். கடல் ஆதிக்கத்தில் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது. ஏனெனில் இங்கே நாம் எதிர்கொள்ளும் கூட்டுச் சவால்கள் கூட்டுழைப்பு, அனைத்தையும் உள்ளடக்கிய தீர்வுகள் அவசியமாக உள்ளன. எம்மை இணைத்து வைக்கும் தேசிய வளத்திற்கான அதீத சந்தர்ப்பங்களை வழங்கும் வாழ்வின் உயர் தரத்தை முன்னேற்றும் அதே கடலே தூரப் பிரிவுகளையும் நாட்டிற்கு அண்மையில் பாதுகாப்பு நிலைமைகள் மீது பாதக தாக்கத்தை ஏற்படுத்தும் உராய்வுகளையும் ஏற்படுத்தக்கூடியது என்பது எமக்கு ஏற்படும் ஆச்சரியம் ஆகும். 28 மில்லியன் சதுர மைல்களுக்கு மேலாக உலக மேற்பரப்பின் 20 வீதத்தினை இந்து சமுத்திரம் உள்ளடக்கிறது என்பதைப் பரிசீலித்து பலதரப்பு கூட்டுழைப்பின் நடைமுறை நன்மைகள் உடனடியாக தெளிவானதாக உள்ளன. இந்த நீர்வழி ஊடாகத்தான் உலக கொள்கலன்கள் போக்குவரத்தின் அரைவாசியும், மொத்த சரக்குப் போக்குவரத்தின் மூன்றிலொரு பங்கும், உலகளாவிய கடல் எண்ணெய் வர்த்தத்தின் இரண்டில் மூன்று பங்கும் எடுத்துச் சென்று இடம்மாற்றப்படுகிறது. இந்த நகர்வின் எந்தக் குழப்பமும் பல தேசியங்களுக்கு பாரதூரமான தந்திரோபாய விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. ஆனால் இந்த அதே வழிப்பாதைகளில் பல கடற்கொள்ளை, கடத்தல், மனித வஞ்சக்கடத்தல், சட்டத்திற்கு மாறான மீன்பிடி, எல்லைகடந்த பயங்கரவாதம் போன்ற வகிக்கப்படும் கடல் துறை சவால்கள் பாதுகாப்பு அமுல்படுத்தல் பிரச்சினையானதும் சூடாக போட்டியிடப்படுவதும் அல்லது முற்றாக இல்லாததுமான இடங்களில் ஆளுகையின் ஆட்சியின் எல்லைத் தொடுப்பு விளம்புகளில் நிலைமையைப் பயன்படுத்த நாடி நிற்கிறது. இந்த சவால்களைத் தீர்த்துக்கொள்வதானது உரிய நேரத்திலான செவ்வையான நடவடிக்கை எடுக்கத்தக்க தகவல்களை நாடி நிற்பதுடன் அதற்கு பதில்செயற்பாடு கிடைக்கக்கூடிய படையினரின் தேவையையும் நாடி நிற்கிறது. ஆனாலும் இடப்பகுதி பெரிதாக இருப்பதுடன், தேசியம் தான் செயல்விளைவுடன் கண்காணித்து பாதுகாப்பது ஒரு தேசியத்திற்கு தடுப்புச் செலவினமானதாகவும் உள்ளது.

ஒத்த மன கூட்டணிகள், பங்காளர்கள், நண்பர்கள், என்ற இந்தச் சூழமைவில் நேரம், தூரம் என்ற சர்வாதிகாரத்துடன் வரும் கடல் குருட்டுத்தனத்தின் தாக்கத்தை கூட்டு ரோந்து, தகவல் பரிமாற்றம், போன்ற பல தரப்பு முயற்சிகளின் ஊடாகக் குறைக்க முடியும். இவ்விதமான செயற்பாடுகளானவை எமது கூட்டு கடல் ஆதிக்க விழிப்புணர்வை முன்னேற்றுவதுடன் நடவடிக்கைகளின் பெரும் பிராந்தியத்திலான நடவடிக்கைகளில் வரையறுக்கப்பட்ட வளங்களின் செயல்விளைவான பயன்பாட்டுக்கும் வேர் விடும் கடல் சவால்களை சகித்துக்கொள்வதற்கு படை நகர்த்துததல் தேவையைக் குறைப்பதற்கும் உதவும். இது கூறுவதற்கு நன்றாக இருப்பினும் ஒன்றாக செயற்படுத்துவது, தகவல்களைப் பகிர்தல் என்பவற்றுக்கு அவ்வாறு செய்வதற்கு ஒரு நம்பிக்கை மட்டம் தேவைப்படுவதுடன் தேசிய பாதுகாப்பு படையினர்

இயல்பாகவே செய்வதற்கு பின்வாங்கும் ஒரு விடயமாகவும் உள்ளது. ஆகவே எவ்வாறு இந்த பின்வாங்குகையை நாம் பொறுப்புடன் வெற்றிகொள்ளப் போகிறோம்?

பல தரப்பு நடவடிக்கைகள், செயற்பாடுகள், இன்றையதைப் போன்ற தொழில்வாண்மைக் கலந்துரையாடல்கள் என்பன ஒத்துழைப்பு, பழக்கத்தைக் கட்டியழுப்புவதற்கும், பங்குபற்றும் படைகளிடையே புரிந்துணர்வு மற்றும் இடையிலான நடவடிக்கையை வளர்ப்பதற்கும் தனியாக மற்றும் பங்காளர் தேசிய இயலுமையை விருத்தி செய்வதற்கும் உதவும். சுருக்கமாக அவர்கள் உறவுகளைக் கட்டியெழுப்ப அதன் நிமித்தமாக நம்பிக்கையை உருவாக்கிறது. ஏற்படுத்தக்கூடிய விதமாக நம்பிக்கையில் உருவாக்குவது கடினமானது ஆனாலும் பிராந்திய ஸ்திரத்தன்மை, சட்ட அடிப்படையிலான ஒழுங்கு என்ற பெரிய சூழமைவில் ஒரு தவிர்க்க முடியாத காரணியாக உள்ளது. நம்பிக்கையைக் கட்டியெழுப்பாவிட்டால் நாம் அழிந்துவிடுவோம் என்பதைக் கவனிப்பது பெறுமதியானது.

ஈடுபடுவதும், நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதும் சட்ட அடிப்படையிலான ஒழுங்கை நிலைக்கச் செய்யும் அனைத்துமடங்கிய பாதுகாப்பு வலைப்பின்னலைப் பேணுவது ஒரு முக்கியமான பாகமாக இருப்பதுடன், எல்லாத் தேசியங்களின் நன்மைக்காக கடலில் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு உதவுகிறது.

கடந்த மே மாதம் இலங்கை கடுமையான வெள்ளத்தை அனுபவித்தபொழுது பல தேசியங்கள் கடற்படைகளை அனுப்பியதுடன், அனர்த்த பதிற்செயற்பாடு மற்றும் மீள எழும்புகைக்கான உதவிகளையும் வழங்கியது. பொறுப்பான கடற்படையினர் செய்வது இதுதான். அத்துடன் உதவி வழங்குவதற்கான தமது தீர்மானத்தில் அவர்களின் தலைமைத்துவத்திற்காக எனது சக கடற்படை தலைவர்களை நான் பாராட்டுகிறேன்.

கடந்த வாரத்திலே ஐக்கிய அரசு பசுபிக் கப்பற்தொகுதி படையினர் இலங்கை கடற்படையுடன் ஊயுசுயுவு 2017 பயிற்சியின் பாகமாக திருகோணமலையில் இணைந்திருந்தனர். பல தரப்புச் சவால்களைத் தீர்த்து வைப்பதற்கு நம்பிக்கையை கட்டியெழுப்புதல் மற்றும் ஒத்துழைப்பு பார்வை நோக்கு ஒன்றிலிருந்தும் இணைந்து செயற்படுதல் பார்வை நோக்கிலிருந்தும் ஊயுசுயுவு செயற்பாடுகள் ஊடாக எமது இராணுவத்திற்கு இராணுவ உறவுகளை விரிவாக்குவதற்கு நான் எதிர்பார்த்து இருக்கிறேன்.

எமது படைகளுக்கிடையே நம்பிக்கையைக் கட்டியழுப்புவது போன்று பரந்த மட்டத்தில் பாதுகாப்பு வழங்குவதற்கான எமது இயலுமையை முன்னேற்ற வேண்டும். கடலில் இடம்பெறும் கடற்கொள்ளை மற்றும் ஆயுதங்களுடனான கொள்கையானது நீண்டகாலப்பகுதியாக மேற்கு இந்திய சமுத்திரக் கடலைப் பாதித்துள்ளதுடன், சோமாலியாவுக்கு மனிதநேய உதவிகளை வழங்குவதைக் குழப்பியதுடன் முக்கியமான கடல் வழியைப் பயன்படுத்துவதிலும் அச்சுறுத்துகிறது. 2012 இல் மாத்தில் கடற்கொள்கையின் நிமித்தமாக அரசாங்கம் மற்றும் கப்பற் கைத்தொழில் துறைக்கு ஏற்படுத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட செலவினம் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களை அண்மிக்கிறது. மிகவும் முகாமைத்துவம் செய்யக்கூடிய இந்த மட்டத்திற்கு இந்த அச்சுறுத்தலைக் குறைப்பதற்கு கப்பல் கைத்தொழில்துறையில் சிறந்த பழக்கங்களையும் கொள்கைகளையும் செய்வதற்கு ஐநா தீர்மானங்கள் மற்றும் திருத்தங்கள் கடலோர தேசியங்கள் மற்றும் அவர்களின் கடற்படையினர் ஒரு கூட்டுப் பொறுப்பை பதிற்செயற்பாட்டை எடுத்துள்ளனர். கிழக்கு முனைகளில் இந்தோனேசிய, மலேசிய, சிங்கப்பூர் கடற்படையினரின் முத்தரப்பு

ரோந்துகள் கடல் ரோந்துகள் ஆரம்பித்த நாளில் இருந்து கடற்கொள்கை சம்பவங்களின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளது.

தேசியங்களும் அவற்றின் கடற்படையினரும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் இயலுமையைக் கொண்டிருப்பதுபோல் அவர்களின் நடவடிக்கைகளான சர்வதேச இடத்தில் தேசிய கட்டளைகளை பிரயோகித்தல் பலதரப்பு கூட்டுறவினால் ஈட்டக்கூடிய ஏதும் நம்பிக்கையை சிதைப்பதாக உள்ளது.

இந்த யதார்த்தங்கள் இந்து சமுத்திரத்திற்குள் நுழைவதினால் இந்து சமுத்திரத்தை அமைதியான கடலாகப் பேணுவதானது அதிகரித்தளவில் பிரச்சினையாகத் தோன்றுகிறது. அதன் கரையோரங்களில் விருத்தியாவதை நாம் காணும் ஆரோக்கியமற்ற தன்மையும் ஸ்திரத்தன்மையின் காவிகளும் தொடர்பான எனது அக்கறைகள் அதிகரிக்கின்றன. இங்கே உள்ள அனைத்துமடங்கிய நிபந்தனைகள் அதீத சுய சேவை ஈடுபடுகைகள் நோக்கிச் செல்லாமல் அதற்குப் பதிலாக அனைவருக்கும் நன்மை அளிக்கும்படி இந்த வளைகுடாவில் வாழும் அனவைருக்கும் நன்மை அளிக்கும்படியான ஒரு கூட்டுறவு அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே எனது நேர்மையான நம்பிக்கையாகும்.

இந்த சட்டங்கள் அடிப்படையிலான ஒழுங்கினை ஊக்குவிப்பதானது எல்லாத் தேசியங்களும், அமைதியாகவும், நம்பிக்கையாகவும், பாதுகாப்பாகவும் பொருளியல் ரீதியாகவும் முன்னேறுவதற்கான மிகச் சிறந்த சாத்தியமான வழியாக இருக்குமென நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். இந்து சமுத்திரத்தின் வழியே வதியும் தேசியங்கள் அவற்றின் அளவு, பலம் என்ற பரிசீலிப்புக்களை ஒருபக்கம் வைத்துவிட்டு அதற்குப் பதிலாக அனைத்துமடங்கிய உரையாடல் மற்றும் தமது தேசிய வேறுபாடுகளைத் தீர்த்து வைக்கக்கூடிய அனைத்துமடங்கிய கலந்துரையாடல்களைத் தொடர்வதானது இந்து சமுத்திரத்தைச் சூழ உள்ள கடல்களுக்கான அவர்களுக்கான உதாரணத்தை விஸ்தரிக்கச் செய்வதுடன் மேற்கில் இருந்து கிழக்கு வரை தற்போதுள்ள போக்கையும் மீளமைக்க ஒன்றாக பணியாற்ற முடியும் என நான் நம்புகிறேன். பசுபிக் கப்பல் தொகுதி கட்டளைத்தளபதி என்ற வகையில் ஒத்தமனதுடைய தேசியங்களின் நெருக்கமாக தொடர்ந்து பணியாற்றுவதற்கும் அளவு, பலம், செல்வம், என்பவற்றைப் பொருட்படுத்தாது எல்லாத் தேசியங்களாலும் அனுபவிக்கப்படும் வழங்கப்பட்டிருக்கும் கடலாதிக்கத்திற்கு சுதந்திரமானதும் திறந்ததுமான செல்கைகளின் நன்மைகளை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்தி தொடர்ந்து பணியாற்றுவதற்கும் நான் எதிர்பார்த்து இருக்கிறேன்.

நன்றி